பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

18 11 2024 **MONDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரேசிலில் நடைபெறும் ஜி-20 உச்சிமாநாட்டில் இன்று பங்கேற்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்துகிறார்.

2. ஆயுஷ்மான் பாரத் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள், 10 லட்சத்திற்கும் அதிகமானோர் பதிவு செய்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. மாநிலங்களுக்கான வரிப்பகிர்வை 50 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

4. இலங்கையின் புதிய பிரதமராக ஹரிணி அமர சூரியா இன்று பதவியேற்றுக்கொண்டார்.

5. இந்தியா – மலேசியா இடையேயான நட்புணர்வு கால்பந்து போட்டி இன்று ஹைதராபாதில் நடைபெறுகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<<>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரேசிலில் நடைபெறும் ஜி-20 உச்சிமாநாட்டில் இன்று பங்கேற்கிறார்.

ரியோடி ஜெனிரோவில் நடைபெறும் இந்த உச்சிமாநாட்டில், அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடன், சீன அதிபர் திரு ஸி ஜின்பிங் உள்ளிட்ட பல்வேறு உலகத்தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

இந்த மாநாட்டின்போது பல்வேறு உலகளாவிய பிரச்சினைகள் குறித்து இந்தியாவின் நிலைப்பாட்டை பிரதமர் எடுத்துரைக்க உள்ளார்.

இந்த மாநாட்டில் பங்கேற்கும் பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி தனித்தனியே பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

முன்னதாக, பிரேசில் சென்றடைந்த திரு நரேந்திர மோடிக்கு, அங்கு வாழும் இந்திய வம்சாவளியினர் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, அவர்களிடையே பிரதமர் கலந்துரையாடினார்.

பிரேசிலில் இரண்டு நாள் அரசு முறைப்பயணத்தை முடித்துக்கொண்டு கயானா செல்லும் பிரதமர் இம்மாதம் 21ஆம் தேதி தாயகம் திரும்புகிறார்.

<<<<<<>>>>>

ஆயுஷ்மான் பாரத் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள், 10 லட்சத்திற்கும் அதிகமானோர் பதிவு செய்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே மக்களிடையே வரவேற்பை பெற்றுள்ள இந்த திட்டத்தில் 70 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் சேர்க்கும் முடிவு கடந்த மாதம் 29-ஆம் தேதி முதல் பிரதமர் திரு நரேந்திர மோடியால் தொடங்கிவைக்கப்பட்டதாகவும், மூன்று வாரங்களில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட மூத்த குடிமக்கள் இதில் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்க சாதனை என்றும் மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் இதுவரை 4 லட்சம் பெண்கள் பதிவு செய்துள்ளனர்.

நான்காயிரத்து 800-க்கும் மேற்பட்ட மூத்த குடிமக்கள் ஒன்பது கோடி ரூபாய் மதிப்பிலான சிகிச்சைகளை இத்திட்டத்தின்கீழ் இதுவரை பெற்றிருப்பதாகவும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

இந்திய – நேபாள எல்லை பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான உயர்நிலைக்கூட்டம் காட்மாண்டுவில் தற்போது நடைபெற்று வருகிறது.

எல்லைப்பகுதிகளில் கண்காணிப்பை தீவிரப்படுத்துவது, ஊடுருவலை தடுப்பது, போதைப்பொருள் கடத்தலை தடுப்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

<<<<<<>>>>>

மாநிலங்களுக்கான வரி பகிர்வை 50 சதவீதமாக உயர்த்தினால் மட்டுமே நிதி மேலாண்மையில் சுயாட்சியுடன் திகழ முடியும் என்று தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

16-ஆவது நிதி ஆணையத் தலைவர் திரு அரவிந்த் பனகாரியா தலைமையிலான குழுவுடன் சென்னையில் இன்று அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

மாநிலங்களுக்கான வரி பகிர்வை 41 சதவீதமாக மாற்றியமைத்ததை வரவேற்பதாக திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - ஸ்டாலின் - 57 செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>>**

மகாராஷ்டிராவில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

அங்கு ஒரே கட்டமாக நாளை மறுநாள் நடைபெற உள்ள வாக்குப்பதிவுக்குத் தேவையான அனைத்து முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு அமித் ஷா, இன்று நவி மும்பையில் நடைபெறும் பிஜேபி பேரணியில் பங்கேற்கிறார்.

மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி, நாக்பூர் மற்றும் கோண்டியாவில் நடைபெறும் பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்கிறார்.

பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, தானே, சோலாபூரில் இன்று வாக்கு சேகரிக்கிறார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, மும்பையில் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார்.

தேசியவாத காங்கிரஸ் கட்சி சரத்பவார் பிரிவு தலைவர் திரு சரத்பவார் இன்று புனேயில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

ஜார்கண்ட் மாநிலத்தில் இரண்டாவது கட்டமாக 38 தொகுதிகளுக்கு நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில் இன்று அங்கு பிரச்சாரம் நிறைவடைகிறது.

ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா மூத்த தலைவரும், அம்மாநில முதலமைச்சருமான திரு ஹேமந்த் சோரன், ராஞ்சி, தும்கா பகுதிகளில் நடைபெறும் பிரச்சாரக் கூட்டங்களில் இன்று பங்கேற்கிறார்.

பிஜேபி மூத்த தலைவரும், உத்தரப்பிரதேச முதலமைச்சருமான திரு யோகி ஆதித்யநாத், ஜம்தாரா, தியோகர் பகுதிகளில் இன்று வாக்கு சேகரிக்கிறார்.

<<<<<<>>>>>>

சுதந்திரப்போராட்ட வீரர் வ உ சிதம்பரனாரின் 88–ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இதனையொட்டி, தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், ஆங்கிலேயருக்கு எதிராக சுதேசி கப்பல்களை இயக்கிய அவரது முடிவு, சுயசார்ப்புக்கான உதாரணங்களில் ஒன்றாக விளங்குகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வ உ சிதம்பரனாரின் தியாக வாழ்வு போற்றத்தக்கது என்று தெரிவித்துள்ளார்.

சென்னை கிண்டியில் உள்ள வ உ சிதம்பரனாரின் திருவுருச்சிலைக்கு மாநில அரசு சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது.

நெல்லையில் உள்ள வ உ சி மணிமண்டபத்தில் அவரது திருவுருவச்சிலைக்கு அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

<<<<<<>>>>>>

இலங்கையில் புதிய அமைச்சரவையின் பதவியேற்பு விழா, அந்நாட்டு அதிபர் திரு. அனுர குமார திசநாயகே தலைமையில் இன்று கொழும்பில் நடைபெற்றது.

அந்நாட்டின் பிரதமராக ஹரிணி அமர சூரியா பதவியேற்றுக்கொண்டார்.

வெளியுறவு அமைச்சராக திரு விஜிதா ஹெராத் உட்பட 22 பேர் பதவியேற்றுக்கொண்டனர்.

<<<<<<>>>>>

ஹரியானா, பஞ்சாப், வடக்கு ராஜஸ்தான், வடக்கு உத்தரப்பிரதேசம் மற்றும் பீகாரின் ஒரு சில இடங்களில் இன்றும், நாளையும் பனிமூட்டம் மிக அதிக அளவில் காணப்படக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இமாச்சலப்பிரதேசத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு பனிமூட்டம் அதிகமாக காணப்படும் என்றும் அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் குல்மார்க், பஹல்காம் பகுதிகளில் குறைந்தபட்ச வெப்பநிலை மைனஸ் 3 டிகிரி செல்சியஸ்ஸாக பதிவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாலத்தீவு மற்றும் இந்திய பெருங்கடல் முதல், தென்கிழக்கு அரபிக்கடல் வரை வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவி வருவதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதன்காரணமாக, தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளின் ஒரு சில இடங்களில் இன்று முதல் வரும் 23-ஆம் தேதிவரை லேசானது முதல், மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, நாகை மாவட்டத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக, அங்கு பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - செல்வன் ஜெபராஜ் - 46 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

தில்லியில் காற்று மாசு இன்று மிக அதிக அளவை எட்டியிருப்பதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

இன்று காலை 11 மணி நிலவரப்படி அங்கு காற்றின் தரக்குறியீடு 487-ஆக பதிவானதாக அந்த வாரியம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா – மலேசியா இடையேயான நட்புணர்வு கால்பந்து போட்டி இன்று நடைபெறுகிறது.

ஹைதராபாதில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

------------

சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியில் இன்று நடைபெற்ற ஆடடத்தில் ஜார்கண்ட் 5-3 என்ற கோல் கணக்கில் பீகாரை வென்றது.

ராஜஸ்தான் - குஜராத் அணிகளுக்கு இடையிலான மற்றொரு ஆட்டம் டிராவில் முடிவடைந்தது. இரு அணிகளும் கோல் எதுவும் போடவில்லை.

--------------

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் தெலுகு அணி – ஹரியானா அணியையும், பெங்களுரு அணி – மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<<>>>>>